# கம்பம் நகராட்சி

**2018–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (28.09.2018) ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

**1.** 1585

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 8/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**2.**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 8/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**3.**

கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்ட பணிகளின் ஸ்தல ஆய்வின்போது மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் ஸ்தல ஆய்வு குறிப்பின்படி கீழ்கண்ட திட்ட பணிகள் யாவும் முடிவுற்றுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் மற்றும் வருடம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | செலவு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சிறப்பு சாலைகள் திட்டம் (SRP)2015–16 (சாலை மற்றும் வடிகால் பணிகள்) | ரூ. 500.00 | ரூ. 496.00 |
| 2. | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2016–17 (சாலை மற்றும் வடிகால் பணிகள்) | ரூ. 200.00 | ரூ. 188.00 |
| 3. | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2017–18 (சாலை மற்றும் வடிகால் பணிகள்) | ரூ. 500.00 | ரூ. 500.00 |
| 4. | தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (Day-NULM) 2015–16 (அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளின் பாதுகாவலர்கள் மருத்துவமனையில் தங்குவதற்கான கட்டிடம் கட்டும் பணி) | ரூ. 90.00 | ரூ. 90.00 |

மேற்கண்ட திட்டப்பணிகள் யாவும் முடிவுற்று மதிப்பீட்டு தொகைக்குள் பணிகள் யாவும் செய்து முடித்துள்ளபடியாலும், பணியில் தொழில்நுட்ப அறிவுரைகளின்படி கொள்அளவுகள் (கூடுதல் மற்றும் குறைவுக்கும்) மதிப்பீட்டு தொகைக்குள் பணிகள் முடிவுற்றுள்ளதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** மன்றம் பதிசெய்யலாம்.

**4.** நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் தலைமையில் 21.02.2018 மற்றும் SBM திட்டம் SHPC கூட்ட நடவடிக்கைகளில் அனுமதியளித்துள்ளதன்படி, இந்நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை அந்தந்த இடங்களில் பிரித்து உரம் தயார் செய்திட நுண்உர செயலாக்க மையம் அமைத்திடவும், இதர உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண். 1563, நாள். 13.08.2018ன்படி பணிகள் மேற்கொள்ள கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 22866/2018/ப்பி3, நாள். 23.08.2018 உத்திரவின்படியும், மதுரை நகராட்சிகளின் நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண்.756/2018/பி2, நாள்.24.08.2018–ன் படியும், நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் கம்பம் நகராட்சிக்குட்பட்ட **வாரச்சந்தையில் நுண்உரம் செயலாக்க மையம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி** ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, 10.09.2018 ஆம் தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 10.09.2018–ல் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| **1** | ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் |
| **2** | திரு. ஆர். சபீர்அலி, அரசு ஒப்பந்ததாரர், **9/16**, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம். |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்நதாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 12.09.2018 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.00 % அதிகம் |
| 2 | திரு. ஆர். சபீர்அலி,<br>அரசு ஒப்பந்ததாரர்,<br>**9/16**, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.63 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 5.00% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கிய திருவாளர்கள் . ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 5.00% (அதிகம்) சதவிகித விலை விகிதத்தினை 4.95 சதவீதமாக மட்டுமே குறைக்க இயலும் என 17.09.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற விலைகுறைப்பு கடிதம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக ஒப்பந்தாரர்களால் கோரப்பட்டுள்ளது. இதில் 5.00% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திருவாளர்கள். ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் ஒப்பந்ததாரர் தனது விலைகுறைப்பு கடிதத்தில் **4**.95% சதவிகிதமாக மட்டுமே விலைகுறைப்பு செய்துதர இயலும் என தெரிவித்துள்ளதால் , கூடுதலில் குறைவாக **4**.95% சதவிகிதம் வழங்கிய திருவாளர்கள். ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**5.** நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் தலைமையில் 21.02.2018 மற்றும் SBM திட்டம் SHPC கூட்ட நடவடிக்கைகளில் அனுமதியளித்துள்ளதன்படி, இந்நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை அந்தந்த இடங்களில் பிரித்து உரம் தயார் செய்திட நுண்உர செயலாக்க மையம் அமைத்திடவும், இதர உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண். 1563, நாள். 13.08.2018ன்படி பணிகள் மேற்கொள்ள கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 22866/2018/ப்பி3, நாள். 23.08.2018 உத்திரவின்படியும், மதுரை நகராட்சிகளின் நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண்.756/2018/பி2, நாள்.24.08.2018–ன் படியும், நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் **கம்பம் நகராட்சிக்குட்பட்ட ஆங்கூர்பாளையத்தில் நுண்உரம் செயலாக்க மையம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி** ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, 10.09.2018 ஆம் தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 10.09.2018–ல் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்கள். ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் |
| 2 | திரு. ஜி. எம். மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன்,<br>ஒப்பந்ததாரர், 60, கிராமசாவடி தெரு, கம்பம். |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்நதாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 12.09.2018 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 8.46 % அதிகம் |
| 2 | திரு. ஜி. எம். மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 60, கிராமசாவடி தெரு, கம்பம். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.01 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 5.01% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கிய திரு. ஜி.எம். மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 60, கிராமசாவடி தெரு, கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 5.01% (அதிகம்) சதவிகித விலை விகிதத்தினை **4.90 % மட்டுமே குறைக்க இயலும்** என 17.09.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

5 **அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக ஒப்பந்தாரர்களால் கோரப்பட்டுள்ளது. இதில் 5.01% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திரு. ஜி. எம். மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 60, கிராமசாவடி தெரு, கம்பம் ஒப்பந்ததாரர் தனது விலைகுறைப்பு கடிதத்தில் 4.90% சதவிகிதமாக மட்டுமே விலைகுறைப்பு செய்துதர இயலும் என தெரிவித்துள்ளதால் , கூடுதலில் குறைவாக 4.90% சதவிகிதம் வழங்கிய திரு. ஜி. எம். மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 60, கிராமசாவடி தெரு, கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

6. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 22866/2018/ப்பி3, நாள். 23.08.2018 உத்திரவின்படி, திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் கம்பம் நகராட்சிக்கு முதல்நிலை குப்பை சேகரம் செய்ய பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 8 எண்ணிக்கை விநியோகம் செய்யும் பணிக்கு ரூ. 14.40 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, 10.09.2018 ஆம் தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 10.09.2018–ல் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது வலைதளம் வழியாகவும் (Online) மற்றும் நேரடியாகவும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| **1.** | M/s பிரியம் இன்டஸ்ரீஸ் அன்டு இன்ஜினியரிங பிரைவேட் லிட், சென்னை | வலைதளம் மற்றும் நேரடியாக வரப்பெற்றது | ரூ.1438400.00 |
| **2.** | M/s நெப்டியூன் ஆட்டோமேசன், ஈரோடு | நேரடியாக வரப்பெற்றது | ரூ.1199200.00 |
| **3.** | M/s என்கான் இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் | வலைதளம் மற்றும் நேரடியாக வரப்பெற்றது | ரூ.14,36,000.00 |
| **4.** | M/s ஷார்ப் சிஸ்டம்ஸ், கோயம்புத்துார். | நேரடியாக வரப்பெற்றது | ரூ.1406720.00 |
| **5.** | M/s பிரிவலன்ஸ் கிரீன் சொலூசன் லிட், பெங்களூர், கர்நாடகா | வலைதளம் மூலம் வரப்பெற்றது | ரூ.1368000.00 |
| **6.** | M/s ஆர்.மதுசூதனன், சென்னை | வலைதளம் மூலம் வரப்பெற்றது | ரூ.1388000.00 |
| **7.** | M/s ஷட்டில்கார்ஸ் இந்தியா பிரைவேட் லிட், சென்னை | வலைதளம் மூலம் வரப்பெற்றது | ரூ.1419520.00 |

**அலுவலகக்குறிப்பு:–** மேற்கண்ட வரிசை எண். 1 முதல் 7 வரையுள்ள **ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகளை சரி பார்த்ததில், ஒப்பந்தகுழு ஆய்வு கூட்ட கூர்ந்தாய்வு அறிக்கையின்படி தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களில் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவாக 0.28 சதவீதம் ரூ.1436000/– கொடுத்துள்ள நிலையில் இவ்வலுவலக விலைகுறைப்பு கடிதத்தில் கோரியுள்ளதை ஏற்று மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவாக 0.42 சதவீதம் (ரூ. 14,34,000/– ரூபாய் பதினான்கு இலட்சத்து முப்பத்து நான்காயிரம் மட்டும் ) கொடுத்துள்ள M/s Encon Engineers, 3 First Floor, VRK Complex, Vadavalli, Coimbatore - 641 041 அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1260/2018/இ1)**

**7.** தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் நுண்உர செயலாக்க மையம் (MCC) மூன்று இடங்களில் அமைக்கவும், முதல்நிலை சேகரம் செய்ய பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (BOV) 8 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கும், இரண்டாம் நிலை குப்பை சேகரம் செய்ய இலகுரக வாகனம் (LCV) 3 எண்ணம் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவில் நிர்வாக அனுமதி வழங்கிய மேற்கண்ட பணிகளுக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை சென்னை, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் வெளியீட்டு ஆணை எண்.3279/ஒப்பந்தபுள்ளி/2018, நாள்.25.08.2018 வழியாக நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.18,144/–ஐ (ரூபாய் பதினெட்டாயிரத்து நூற்று நாற்பத்து நான்கு மட்டும் ) அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜென்ஸி, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண். 1260/2018/இ1)

**8.** தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டம் (TURIP 2018-19)ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை மேம்பாட்டு பணிகள் செய்யும் பணிகள் செய்திடவும், இந்நகராட்சி உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் அகற்றுவதற்கும் இதர உள்கட்டமைப்பு பணிகள் செய்திடவும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவுகளில் நிர்வாக அனுமதி வழங்கிய சாலை பணிகள் சிப்பம்–1, சிப்பம்–2 மற்றும் சிப்பம்–3 பணிகளுக்கும், உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் அகற்றுவதற்கு சிப்பம்–1 பணிகள் மேற்கொள்ள மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை சென்னை, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் வெளியீட்டு ஆணை எண்.3465/ஒப்பந்தபுள்ளி/2018, நாள்.01.09.2018 வழியாக நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.1,37,025/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து ஏழாயித்து இருபத்து ஐந்து மட்டும் ) அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜென்ஸி, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண். 2322/2018/இ1)

**9.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1582, நாள்.31.08.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 25.09.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரா் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி தெரு விளக்குகளை 2018–2019ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கு பராமரிக்க தேவையான மின் பொருட்கள் விநியோகம் செய்தல் | 4,98,000/– | கே.எம்.பி.எல். எலக்ட்ரிகல்ஸ் | – | 0.03 |
| | | | இராஜேந்திரா ஸ்டோர்ஸ் | 1.22 | – |

**அலுவலகக் குறிப்பு** : – வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட கே.எம்.பி.எல். எலக்ட்ரிகல்ஸ் ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.03 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 773/2018/இ2)

**10.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையில் நகராட்சி பகுதியில் பொதுமக்கள் பயன்பாடு அற்ற நிலையிலும், இடியும் நிலையில் உள்ள கழிப்பறைகளை கண்டறிந்து அவற்றை படிப்பகம் அல்லது சிறுவர் விளையாட்டு பூங்காவாக மாற்றிட அறிவுரைகள் வழங்கியதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20,காளவாசல் வடக்கு 7–வது தெருவில் ஓடையின் அருகில் உள்ள பழுதடைந்த கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்தி அவ்விடத்தில் சிறுவர் பூங்கா அமைத்திட ஆகும் உத்தேச செலவு தொகை ரூ. 2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**11.** கம்பம் நகர்மன்றத் தீர்மான எண்.1530 நாள் 29.06.2018இல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதன்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான முகைதீன் ஆண்டவர் புரம் நடுநிலைப்பள்ளி (சுங்கம்)க்கு பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்கு 09.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருந்தது. தொழில்நுட்ப காரணங்களினால் பதிவேற்றம் செய்யப்படாததால் மீளவும் மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை, தேனி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் வெளியீட்டு ஆணை எண்.932/ நாள்.10.08.2018 வழியாக தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் விளம்பர கட்டணம் ரூ. 4,032/– அய் கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2306 /2017/இ1)

**12.** கம்பம் நகராட்சி பகுதியில் சேரிக்கப்பட்டும் விற்பனை செய்ய இயலாத ப்ளாஸ்டிக் கழிவுகளை அரியலூார் அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு லாரி மூலம் கொண்டு செல்வதற்கு **07.09.2018–**ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம்<br>லாரி வாடகை நடை ஒன்றுக்கு<br>ரூ. |
|---|---|---|
| 1 | உரிமையாளர்,<br>தீன் டிரேடர்ஸ்,<br>கதவு எண்.**36**இ,குரங்குமாயன் தெரு,<br>கம்பம். | **13,500/–**<br>(ரூபாய் பதிமூன்றாயிரத்து ஐந்நூறு மட்டும்) |
| 2, | உரிமையாளர்,<br>எ.எஸ்.ஏ.ஏஜென்ஸிஸ், லாரி புக்கிங் ஆபீஸ்,<br>வி.கே.பில்டிங், கம்பம் மெட்டு ரோடு,<br>கம்பம். | **14,000/–**<br>(ரூபாய் பதிநான்காயிரம் மட்டும்) |

**அலுவலக்குறிப்பு..** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர், தீன் டிரேடர்ஸ்,கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 3125/2018/எச்1)**

| | |
|---|---|
| **13.** | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1516, நாள். 30.05.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 31.08.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொது நிதி 2018–2019</u><br>நகராட்சி வார்டு எண்.31, நந்தகோபால் சாமி நகர், (எல்.எப்.ரோடு) (டி.எஸ்.எண்.12/2பி மற்றும் 12/2ஏ, வார்டு–டி, பிளாக்–24) மனைபிரிவில் உள்ள நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா இடத்தினை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி. | 2,00,000/– | ஏ.பி. கன்ஸ்ட்ரக்சன்ஸ் | – | 0.02 |
| | | | ஆர். சபீர்அலி | 0.65 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திருவாளர் ஏ.பி. கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.02 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1938/2018/இ1)

| | |
|---|---|
| **14.** | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1514, நாள்.30.05.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 31.08.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொது நிதி 2018–2019</u><br>நகராட்சி வார்டு எண்.25, நந்தகோபால் சாமி தெரு, டி.எஸ்.கே. மனைபிரிவு (டி.எஸ். எண். 7/1, வார்டு–டி, பிளாக்–1) மனைபிரிவில் உள்ள நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா இடத்தினை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி. | 2,20,000/– | ஆர்.சபிர்அலி, ஒப்பந்ததாரர், கம்பம் | 0.64 | – |
| | | | ஏ.பி.கன்ஸ்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் | – | 0.02 |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திருவாளர்கள் ஏ.பி.கன்ஸ்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.02 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| | |
| 15. | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1569, நாள். 13.08.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 31.08.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **குடிநீர் நிதி 2018–2019**<br>இந்நகராட்சிக்குட்பட்ட தாத்தப்பன் குளம் மேல்நிலைத் தொட்டி வளாகத்திற்கு சுற்றுச்சுவர், தளம் அமைத்திடவும், அருகில் உள்ள பழுதடைந்த பயனற்ற கழிப்பிடத்தின் ஒரு பகுதியை குடிநீர் குழாய் பொருட்கள் இருப்பு வைப்பு அறை (குடோன்) ஆக மாற்றும் பணி மேற்கொள்ளுதல் | 5,00,000/– | கே.சி. போஸ் | – | 0.09 |
| | | | வி.கிருஷ்ணன் | 0.19 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி. போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.25 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

16. தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் பருவ மழை காலத்தில் மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளவாறு இந்நகராட்சி பகுதிகளில் மழைகாலங்களில் ஏற்படும் இயற்கை இடற்பாடுகளால் மரக்கிளைகள் சேதமடைந்துள்ளதை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் வெட்டி அப்புறப்படுத்துவற்கு ஏதுவாக நகராட்சி பயன்பாட்டிற்கு மரஅறுவை மிஷின் (பெட்ரோல் ஹேன்லி அறுவை இயந்திரம்) வாங்கிடவும், மழைநேர பணியாளர்களுக்கு தேவையான டார்ச் லைட் வாங்கிட தயார்செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 45,000–/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | நகராட்சி பயன்பாட்டிற்கு மரஅறுவை மிஷின் (பெட்ரோல் ஹேன்லி அறுவை இயந்திரம்) மற்றும் மழைநேர பணியாளர்களுக்கு தேவையான டார்ச் லைட் விநியோகம் செய்தல் | 1)ராஜேந்திரா ஸ்டார்ஸ், 155/17, மெயின்ரோடு, கம்பம் | ரூ. 42,200/– |
| | | 2)ஆர்.ஆர். எலக்ட்ரிகல்ஸ், 149, மெயின்ரோடு, கம்பம் | ரூ. 45,800/– |
| | | 3)திருப்பதி எலக்ட்ரிகல்ஸ் அன்டு ஸ்பேர்ஸ், 260/பி, எல்.எப். ரோடு, கம்பம். | ரூ. 46,300/– |

**அலுவலகக்குறிப்பு..** 1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ராஜேந்திரா ஸ்டோர்ஸ், 155/17,மெயின்ரோடு, கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**17.** இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வணிக வளாக கடைகள் 1989ம் ஆண்டு கட்டப்பட்டு குத்தகை அடிப்படையில் மாத வாடகைக்கு விடப்பட்டு பயன்பாட்டில் வந்துள்ள நிலையில் தற்போது மேற்கண்ட கட்டிடம் மிகவும் பழுது ஏற்பட்டு கடை எண். 10, 11, 12 முன்புறமுள்ள ஆர்.சி.சி. சிலாப் பெயர்ந்து விழுந்துவிட்டதாலும், மேலும் இதர கடைகளில் மேற்கூரை அடிக்கடி சிறுசிறு அளவில் பெயர்ந்து விழுந்து வருவதால், பொதுமக்களுக்கு எந்தநேரமும் ஆபத்து நேரும் நிலையிலும், உயிர்சேதம் ஏற்படும் சூழ்நிலை உள்ளதால் மேற்படி கட்டிடத்தினை பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.15,00,000/–க்கும், (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மேற்படி செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 3677/2018/இ1)

**18.** கம்பம் நகராட்சி 6.48 சதுர கி.மீ பரப்பளவுடன் 33 வார்டுகள் கொண்ட முதல் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 69183 ஆகும்.

மக்கள் தொகை கணக்கீட்டின் படி தேவைப்படும் குடிநீரின் அளவு 6.20 எம்.எல்.டி. ஆகும். தற்போது தமிழ்நாடு வடிகால் வாரியம் மூலம் 4.00 எம்.எல்.டி மற்றும் சுருளிப்பட்டி தலைமை குடிநீர் ஏற்று நிலையத்தில் இருந்து 2.50 எம்.எல்.டி ஆக மொத்தம் 6.50 எம்.எல்.டி. குடிநீர் பெறப்பட்டு மக்களுக்கு சராசரியாக நபர் ஒன்றுக்கு 95 லிட்டர் வீதம் இருநாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பகுதியில் விவசாய பகுதிகள் அதிகம் உள்ளதால் குடிநீர் மாசு ஏற்படாமல் குடியிருப்பு பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு தரமான குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் மற்றும் குடிநீர் மையங்களை பராமரிப்பு மேற்கொள்வதிலும், Membrane மாற்றம் செய்யவும் உபகரணங்கள் மாற்றவும் அதிக அளவில் தொகை செலவிட வேண்டிய நிலை உள்ளது.

எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு கம்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் பங்களிப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக மையங்கள் அமைத்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் வழங்க ஏதுவாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் பங்களிப்பின் கீழ் (Public Private Partnership mode) பாதுகாக்கப்பட்ட குடிநீர் மையங்கள் ஏற்படுத்தவும், மேலும் மறைமலை நகர் மற்றும் செங்கல்பட்டு நகராட்சிகளில் இத்திட்டம் சோதனை முறையில் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருவதால் இத்திட்டத்தினை இந்நகராட்சியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு பொது மக்களுக்கு குறைந்த விலையில் மேற்படி குடிநீர் விநியோகம் செய்யவும், மேற்படி விற்பனை விலையில் நகராட்சிக்கும் ஒரு பங்கு பெற்று சிறு வருவாய் ஈட்டவும் தக்க வகையில் அப்பணியை செய்ய முறையான நிபந்தனைகளின் அடிப்படையில் ஆர்வம் உள்ள நிறுவனங்களை தேர்வு செய்ய கீழ்காணும் பகுதிகளுக்கு உரிய விருப்ப கேட்பு (Expression of Interest) கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | இடத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 முதல் 33 வார்டுகள் | ஒவ்வொரு வார்டிலும் ஒன்று வீதம் 33 எண்ணம் |

**அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3925/2018/இ1)

**19.** தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட நந்தகோபால் சாமி நகர் பூங்கா வளாகத்தில் நுண்உர செயலாக்க மையம் (MCC) அமைப்பதற்கு ரூ. 47.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய நிலையில் மேற்படி பணி மேற்கொள்வதை ஆட்சேபித்து நகராட்சிக்கு எதிராக திரு. பி. ராதாகிருஷ்ணன், தலைவர் ஸ்ரீ நந்தகோபால்சமி நகர் குடியிருப்போர் நல சங்கம், கம்பம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றமதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P(MD) 19552/2018 – வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜரான உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. கே. ஹேமாகார்த்திகேயன், மதுரை அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 10,000/–அய் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதிபெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1260/2018/இ1)

**20.** நகர்மன்ற தீர்மான எண். **1564**, நாள். **13.08.2018** இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி பொது சொத்துவரி சீராய்வுக்கான சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவம் மற்றும் கணக்கீட்டுத்தாள் **19000** எண்ம் (மூன்று பக்கம்) அச்சிட்டு தருவதற்கு **05.09.2018** அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் விபரம் | விலைவிகிதம் | |
|---|---|---|---|
| 1. | திரு. கே. பாஸ்கரன்,<br>சுரபி கம்யூட்டர் அச்சகம், கம்பம் | மூன்று பக்கங்கள் கொண்ட ஒரு செட்டிற்கு | ரூ. 3.20 + GST 5% |
| 2. | திரு. மார்டன் பிரிண்டர்ஸ்,<br>கம்பம் | மூன்று பக்கங்கள் கொண்ட ஒரு செட்டிற்கு | ரூ. 3.75 + GST 5% |

**அலுவலகக் குறிப்பு: 1)** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழங்கிய திரு. கே. பாஸ்கரன், சுரபி கம்யூட்டர் அச்சகம், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**21.** இந்நகராட்சி பகுதியில் உள்ள சாக்கடை மற்றும் கழிவுநீர் கால்வாய்களிலிருந்து உருவாகும் கொசுக்களை அழிப்பதற்கு தேவைப்படும் மருந்து பேசில்லஸ் துருந்தியன்சிஸ் (Bacillus Thrunjiancies ) இருப்பு குறைவாக உள்ளது. எனவே மேற்காணும் மருந்து **100** கி.கி வாங்கி வழங்குவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**1,50,000**/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்யவும், பொது நிதியிலிருந்து மேற்படி செலவினத் தொகையை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3712/2018/எச்1) |
| **22.** | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒ.மு.எண்.13433/2018/ஜே1, 17.09.2018–ஆம் தேதிய கடிதத்தில், கொசு ஒழிப்பு பணியாளர்களை (DBC Workers) ஒப்பந்த அடிப்படையில்,வெளிக்கொணர்வு (Out sourcing) முறையில், அந்தந்த நகராட்சி நிர்வாக அனுமதி வரம்புக்கு உட்பட்டு, நகராட்சி ஆணையர்களே கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை நியமித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில், வெளிக்கொணர்வு (Out sourcing) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ.59.51 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 3963/2018/எச்1 ) |
| **23.** | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 Z 3591 பிளேசர் லாரிக்கு 12.11.2018 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,25,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன்அனுமதிபெற்று தகுதிச்சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதைமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4156/2018/எச்1) |

**நாள். 28.09.2018**
**இடம். கம்பம்**

**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**